Asylum Support Partnership
help and advice

March 2012 Tamil

# அடைக்கல ஆதரவிற்கு விண்ணப்பம் செய்தல்

யுனைடெட் கிங்டமில் (யூகே) நீங்கள் அடைக்கலத்திற்காக விண்ணப்பிக்கும்போது, உங்களை ஓர் அகதியாக அடையாளம் காணும்படி நீங்கள் உள்துறை அமைச்சகத்தைக் கேட்டுக் கொள்கிறீர்கள். 1951 ஐக்கிய நாடுகளின் ஒப்பந்தம் என்று அழைக்கப்படும்அகதிகளின் நிலைப்பாட்டுடன் தொடர்புடைய சர்வதேச சட்டத்தின் ஒரு பிரிவிலிருந்து அகதி என்பதற்கான விளக்கம் பெறப்பட்டுள்ளது. நீங்கள் அகதி ஒப்பந்தத்தின் கீழ் பாதுகாப்பு பெறுவதற்கு, உங்கள் இனம், மதம், தேசியம், ஒரு குறிப்பிட்ட சமூக குழுவின் உறுப்பினராக இருத்தல் அல்லது அரசியல் கருத்தின்படி உங்கள் நாட்டில் நீங்கள் தண்டனை பெறக்கூடிய அச்சம் போன்ற காரணம் உங்களுக்கு உள்ளதாக யூகே நினைக்க வேண்டும்.

மாற்றாக, நீங்கள் யூகேயில் தங்க வேண்டிய பிற மனிதாபிமான சார்ந்த அல்லது கட்டாயமான காரணங்கள் இருந்து, அது மறுக்கப்பட்டால், அது உங்கள் மனித உரிமைகள் மீதான ஐரோப்பிய ஒப்பந்தத்தின் படி (European Convention on Human Rights) மீறுவதாக அமையக்கூடும். இது உங்களுக்கு பொருந்துமா என்பதை உங்கள் சட்ட பிரதிநிதி உங்களுக்குக் கூறுவார். அடைக்கலம் மற்றும் மனித உரிமை சட்டங்கள் சிக்கலானவை. நீங்கள் சிறந்த சட்ட ஆலோசனை மற்றும் பிரதிநிதித்துவம் பெறுவது மிகவும் முக்கியமானதாகும். சட்ட ஆலோசனை மற்றும் பிரதிநிதித்துவம் பற்றிய கூடுதல் விவரங்களுக்கு, இச்சிற்றேட்டின் 5 வது பக்கத்தைப் பார்க்கவும். நீங்கள் அடைக்கலத்திற்காக விண்ணப்பிக்கும்போது, அதிகாரிகள் உங்களை ‘அடைக்கலம் நாடுபவர்’ என்று குறிப்பிடுவார். நீங்கள் 18 வயதுக்கு குறைவானவராக இருந்து, சுயமாக அடைக்கலத்திற்கு விண்ணப்பிப்பவராக இருந்தால், உங்களுக்கு சமூக சேவைகள் (social services) அல்லது ஓர் அகதி அமைப்புடன் தொடர்பு ஏற்படுத்திக் கொடுக்கப்படும்.

## அடைக்கல விண்ணப்பங்களை யார் கையாள்கின்றனர்?

யூகேயில், உள்துறை அமைச்சகத்தில் (Home Office) உள்ள யூகே எல்லை முகமை (UK Border Agency - UKBA) அடைக்கல விண்ணப்பதாரர்களுக்கான நேர்காணல்களை நடத்தி, அவர்களுடைய அடைக்கல விண்ணப்பங்களை மதிப்பீடு செய்வதற்கான பொறுப்பை ஏற்றுள்ள அரசு அமைப்பாகும்.

## அடைக்கலத்திற்கு நான் எவ்வாறு விண்ணப்பிக்க வேண்டும்?

**நீங்கள் யூகேவில் நுழைந்தவுடன் அடைக்கலத்திற்கு விண்ணப்பிப்பது மிகவும் முக்கியமாகும் மற்றும் இயன்றவரை விரைவாக நீங்கள் சட்ட ஆலோசனையையும் பெற வேண்டும்.**

பின்வரும் முறைகளில் நீங்கள் அடைக்கலத்திற்கு விண்ணப்பிக்கலாம்

- நுழைவிடத்தில், குடிவரவு அலுவலரிடம், உதாரணமாக விமான நிலையத்திலோ அல்லது துறைமுகத்திலோ அல்லது
- நீங்கள் யூகேவில் நுழைந்தவுடன், Croydon அருகாமையிலுள்ள யூகே எல்லை முகமையின் அலுவலகத்தில் நேரடியாக அடைக்கலத்திற்கு நீங்கள் விண்ணப்பிக்கலாம். உதாரணமாக, நீங்கள் மாணவர், வருகையாளர் அல்லது தொழில் விசாவில் நாட்டினுள் சட்டவிரோதமாகவோ அல்லது சட்டப்பூர்வமாகவோ நுழைந்திருக்கக் கூடும். Croydon அடைக்கல தகுதியறியும் மையம் (Asylum Screening Unit) **Lunar House, 40 Wellesley Road, Croydon CR9 2BY** என்ற இடத்தில் அமைந்துள்ளது.
- மிகவும் அசாதாரணமான சூழல்களில், அஞ்சல் வாயிலாகவோ அல்லது உள்ளூர் அமலாக்க அலுவலகத்திலோ உங்கள் அடைக்கல விண்ணப்பத்தை பூர்த்தி செய்து தேர்வு செய்யக்கூடிய சாத்தியங்கள் உள்ளன. இது ஆதரவற்ற குழந்தைகள் மற்றும் நியாயமான காரணங்களினால் Croydon க்கு பயணம் செய்ய இயலா நிலையில் உள்ளவர்களுக்கு இது பொருந்தும். இது உங்களுக்குப் பொருந்தக் கூடியதா என்பதைக் கண்டறிய உள்ளூர் அகதி முகமை ஒன்றைத் தொடர்பு கொள்ளவும்.

அடைக்கல தகுதி மையத்தில் அடைக்கலத்திற்கான விண்ணப்பம் ஒன்றை செய்ய விரும்பினால், நியமனத்தை பதிவுசெய்ய **020 8196 4524** என்ற எண்ணுக்கு தொலைபேசி மூலம் நீங்கள் தொடர்பு கொள்ளவும். நியமனம் செய்யாமல் வரும் பட்சத்தில் UKBA அதே நாளில் உங்களை காணும் என்பதற்கு எவ்வித உத்திரவும் இல்லை.

மற்ற சிற்றேடுகள் http://languages.refugeecouncil.org.uk என்ற வலைத்தளத்தில் கிடைக்கும்
Asylum Support Partnership is a partnership project hosted by the British Refugee Council
British Refugee Council, (commonly called the Refugee Council) is a company limited by guarantee registered in England and Wales, [No 2727514] and a registered charity, [No 1014576].

## அடைக்கலத்திற்கு நான் விண்ணப்பிக்கும்போது என்ன நடக்கும்?

UKBA அடைக்கலத்திற்கு விண்ணப்பங்களை பல்வேறு முறைகளில் ஆய்வு செய்யும். சில அடைக்கல விண்ணப்பங்கள் வெகு விரைவாக பைசல் செய்யப்படும். தகுதிக்கான நேர்காணல் என்றழைக்கப்படும் முதல் நேர்காணலுக்குப்பின், உங்கள் விண்ணப்பத்தை எவ்விதம் கையாள வேண்டுமென்று UKBA முடிவு செய்யும். உங்களுக்குத் தேவைப்படும் பட்சத்தில் மொழிப்பெயர்ப்பாளர் ஒருவர் வழங்கப்படுவார். நீங்கள் விரும்பினால்,
ஆண் அல்லது பெண் மொழிப்பெயர்ப்பாளரை நீங்கள் கேட்டுப் பெறலாம்.

## தகுதிக்கான நேர்காணலின்போது என்ன நடக்கும்?

உங்கள் தனிப்பட்ட விவரங்கள் மற்றும் உடல்நலம்,நீங்கள் எவ்விதம் யூகேவுக்கு வந்தீர்கள் மற்றும் ஏதேனும் சட்டவிரோதமான நடவடிக்கையில் நீங்கள் ஈடுபட்டதன் விவரங்கள் ஆகியவை பற்றிய அடிப்படை கேள்விகளை UKBA கேட்க வேண்டும் என்பதே இந்த நேர்காணலின் நோக்கமாகும். நீங்கள் ஏன் யூகேயிற்கு வந்தீர்கள் மற்றும் நீங்கள் ஏன் உங்கள் தாய்நாட்டிற்கு நீங்கள் ஏன் திரும்ப முடியாது என்பதற்கான உங்களது காரணங்களை அவர்கள் உங்களிடம் கேட்பார்கள் ஆனால் நீங்கள் எதற்காக அடைக்கலத்திற்கு விண்ணப்பிக்கிறீர்கள் என்பது பற்றிய விரிவான கேள்விகளை அவர்கள் உங்களிடம் கேட்கக்கூடாது. உங்கள் தகுதி நேர்காணலின் போது கேட்கப்படும் பெரும்பாலான விவரங்கள், உங்கள் அடைக்கல நேர்காணலிலும் திரும்பக் கேட்கப்படும், அப்பொழுது ஏதேனும் விவரங்களில் முரண்பாடுகள் இருந்தால் அவற்றை விளக்குமாறு நீங்கள் எதிர்பார்க்கப்படுவீர்கள்.

## தனிநபர் விவரங்கள் மற்றும் ஆவணப்படுத்துதல்

உங்களைச் சார்ந்துள்ளவர்கள், உதாரணமாக உங்கள் துணை அல்லது குழந்தைகள் போன்றவர்கள், அவர்களைப் பற்றிய விவரங்கள் உங்கள் விண்ணப்பத்தில் சேர்க்கப்படும் பொருட்டு, இந்த நேர்காணலுக்கு உங்களுடன் வரவேண்டும்.
நேர்காணலானது நீண்ட நேரம் நடக்க வாய்ப்புள்ளது, எனவே உங்களால் முடிந்தால், உடன் உணவு மற்றும் குடிநீரை நீங்கள் எடுத்து வரவேண்டும்.

நீங்கள் யூகேவில் நுழைவதற்குப் பயன்படுத்திய உங்கள் பெயர் மற்றும் உங்கள் தேசியம் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு செல்லத்தக்க ஆவணத்தை நீங்கள் வைத்துள்ளீர்களா என்று UKBA சோதனையிடும். இது ஒரு கடவுச்சீட்டாகவோ அல்லது அடையாளத்திற்கான வேறொரு ஆவணமாகவோ இருக்கக்கூடும். செல்லத்தக்க அடையாள ஆவணம் ஒன்றை நீங்கள் வைத்திராவிட்டால், நீங்கள் ஏன் ஒன்றை வைத்திருக்கவில்லை என்ற விரிவான விவரங்களை நீங்கள் விளக்கிக்கூற வேண்டும்.

தகுதிக்கான நேர்காணலின்போது, உங்கள் விரல்ரேகைகள் மற்றும் உங்கள் புகைப்படம் ஒன்று UKBA வினால் பெறப்பட்டு, உங்கள் விண்ணப்ப பதிவு அட்டையில் (Application Registration Card–ARC) வைக்கப்படும். பொதுவாக உங்களது குடும்ப உறுப்பினர்கள் அனைவருக்கும் ஒரு ARC வழங்கப்படும். இந்த அட்டை நீங்கள் ஓர் அடைக்கலம் நாடுபவர் என்பதை உறுதிப்படுத்தும். நீங்கள் நிதி ஆதரவிற்கு விண்ணப்பிக்கும் பட்சத்தில், வாராந்திர அடிப்படையில் பணத்தைப் பெற்றுக் கொள்ள இந்த அட்டை உங்களுக்கு உதவும். சில சமயங்களில்,UKBA–வினால், உங்களுக்கு ஒரு ARC யை அளிக்க முடியாமல் போகலாம். அதற்கு பதிலாக, உங்கள், உங்கள் அடைக்கல கோரிக்கையை அங்கீகரிக்கும் ஒரு நிலையான ஏற்புக் கடிதத்தை (Standard Acknowledgement Letter – SAL) நீங்கள் பெறக்கூடும்.

பெரும்பாலான அடைக்கலம் நாடுவோர், IS96 என்றழைக்கப்படும் ஒரு கடிதத்தைப் பெறுவர். நீங்கள் யூகேயில் தற்காலிகமாக அனுமதிக்கப்பட்டிருப்பதையும், உங்கள் அடைக்கல விண்ணப்பத்தின்மீது அதிகாரிகள் முடிவெடுத்து வருவதையும் மற்றும் இந்த நேரத்தில் நீங்கள் ஓர் ஆஜர் மையத்தில் தொடர்ந்து ஆஜராக வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுவதையும் இது குறிக்கிறது.

## நீங்கள் எங்கிருந்து வந்திருக்கிறீர்கள்

தகுதிக்கான நேர்காணலில், யூகே அல்லாத வேறொரு நாடு உங்கள் அடைக்கல விண்ணப்பத்தை ஏற்பதற்கு காரணமாக இருக்கக்கூடுமா என்பதை அதிகாரிகள் முடிவு செய்வார்கள். உதாரணமாக, நீங்கள் வேறொரு நாட்டின் வழியாக பயணம் செய்திருக்கக்கூடும் மற்றும் UKBA, அந்த நாட்டில் நீங்கள் அடைக்கலத்திற்காக விண்ணப்பித்திருக்கலாம் என்று நினைப்பதும் இதற்குக் காரணமாக இருக்கக்கூடும்.

## உங்கள் விண்ணப்பம் விரைவாக கவனிக்கப்படக்கூடுமா?

உங்கள் விண்ணப்பத்தை விரைவாக கவனிக்கலாம் என்று அதிகாரிகள் முடிவு செய்தால், உங்கள் விண்ணப்பம் ஓர் விரைவு முடிவிற்கான நடைமுறை மூலம் ஆய்வு செய்யப்படலாம். இது நடைபெற்றால், அதிகாரிகள் உங்களை உங்கள் விவகாரத்தில் ஒரு முழுமையான முடிவுக்கு வரும்வரை அவர்கள் ஹார்மண்ட்ஸ்வொர்த் அகற்று மையத்திற்கோ (Harmondsworth Removal Centre)(நீங்கள் ஆணாக இருந்தால்) அல்லது யார்ல்'ஸ் வுட் அகற்று மையத்திற்கோ (Yarl's Wood Removal Centre)(நீங்கள் பெண்ணாக இருந்தால்) அனுப்பி வைக்கக்கூடும். இந்த மையங்கள் ஏதேனும் ஒன்றில் நீங்கள் காவலில் வைக்கப்பட்டால்,
ஒரு சட்ட பிரதிநிதி வழங்கப்பட வேண்டும் மற்றும் உங்கள் விவகாரம் மிக விரைவாக முடிக்கப்பட்டுவிடும். இருப்பினும், மிகவிரைவாக கையாளப்படும் அனைத்து அடைக்கல விண்ணப்பதாரர்களுமே காவலில் வைக்கப்படுவதில்லை. கர்ப்பமாக உள்ள பெண்கள், மாற்றுத்திறனாளிகள், தீவிர மனநலப் பிரச்சனை உள்ளவர்கள், கொடுமை அல்லது ஆள் கடத்தலக்கு ஆளானவர்கள்

மற்றும் குழந்தைகள், போன்ற குறிப்பிட்ட சில நபர்கள் விரைவு முடிவிற்கான நடைமுறைக்கு பொருத்தமற்றவர்கள் எனக் கருதப்படுகின்றனர்.

## இயன்றவரை விரைவாக நீங்கள் அடைக்கலத்திற்கு விண்ணப்பித்துள்ளீர்களா?

நீங்கள் யூகேவுக்கு வந்து சேர்ந்தவுடன் இயன்றவரை விரைவாக அடைக்கலத்திற்கு விண்ணப்பித்துள்ளீர்களா என்பதை UKBA சரிபார்க்கும். பதில் 'இல்லை' என்றால், தங்குமிடம் மற்றும்/அல்லது வாழ்வதற்கான செலவுகளுக்கு அரசின் உதவி உங்களுக்கு கிடைக்காது. 'அடைக்கல ஆதரவிற்கு நீங்கள் எவ்விதம் விண்ணப்பிக்கலாம் என்பது குறித்த கூடுதல் விவரங்களுக்கு,'அடைக்கல ஆதரவிற்கு விண்ணப்பித்தல்' என்ற தலைப்பிலான சிற்றேட்டை http://languages.refugeecouncil.org.uk என்ற வலைத்தளத்தில் பார்க்கவும்.

## மேலும், தகுதிக்கான நேர்காணலின்போது பின்வருபவை நடைபெறக்கூடும்:

- ஆரம்பம் முதல் முடிவு வரை உங்கள் அடைக்கல கோரிக்கைக்கு பொறுப்பேற்கும்,'அடைக்கல ஆலோசனையாளர்' ('case owner') என்றழைக்கப்படும் UKBA அதிகாரியின் பெயர் மற்றும் தொலைபேசி விவரங்கள் உங்களுக்கு அளிக்கப்பட வேண்டும். அடைக்கல ஆலோசனையாளர், உங்களிடம் நேர்காணல் நடத்தி, உங்கள் விண்ணப்பத்தின் மீதான முடிவை எடுக்கும் பொறுப்புடையவர் ஆவார். உங்கள் அல்லது உங்கள் பிரதிநிதிகளுக்கான ஒரு முக்கிய தொடர்பாக இந்த அடைக்கல ஆலோசனையாளர் இருப்பார்.
- சட்ட பிரதிநிதித்துவம் பெறுதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுவது வேறுபடக்கூடும். ஒரு சட்ட பிரதிநிதியை சந்திப்பதற்காக, தொடர்புக்கான விவரங்கள் மற்றும் தேதி உங்களுக்கு அளிக்கப்படலாம், அல்லது தொடர்புக்கான பிரதிநிதிகளின் பட்டியல் ஒன்று உங்களிடம் கொடுக்கப்படலாம்.
- உங்கள் தகுதி நேர்காணல் குறிப்புகளின் பிரதியொன்று உங்களிடம் கொடுக்கப்பட வேண்டும்.
- யூகேயிலுள்ள அடைக்கல நடைமுறைகள் மற்றும் வாழ்க்கை முறை குறித்து நீங்கள் அறிந்திருக்க வேண்டிய முக்கிய விவரங்களை பெறும் பொருட்டு, அதிகாரிகள் உங்களிடம் 'சேர்ப்பிற்கு' ('induction') வருகை தரும்படி கூற வேண்டும்.

நீங்கள் பெறுவதற்கு தகுதி பெறக்கூடிய சேவைகள் (உதாரணமாக, நிதி உதவி மற்றும் தங்குமிடம்) குறித்து 15 நாட்களுக்குள் உங்களுக்கு தெரியப்படுத்த வேண்டிய சட்டரீதியான கடமை UKBA க்கு உள்ளது. ஆலோசனைக்காக நீங்கள் தொடர்பு கொள்ளக்கூடிய அரசு சாரா அமைப்புகள் மற்றும் சட்ட ஆலோசனை வழங்கும் மற்ற அமைப்புகள் பற்றிய விவரங்களையும் அவர்கள் உங்களுக்கு அளிக்க வேண்டியது அவசியமாகும்.

## அடைக்கலத்திற்கான நேர்காணலின்போது என்ன நடக்கும்?

தகுதி நேர்காணலுக்குப்பின், அடைக்கலம் கோருவதற்கான காரணங்களைப் பற்றி உங்களிடம் கேட்கும் பொருட்டு உங்களை ஒரு நீண்ட நேர நேர்காணலில் பங்கேற்கும்படி UKBA கேட்கும் பொருட்டு உங்களை ஒரு நீண்ட நேர நேர்காணலில் பங்கேற்கும்படி அதிகாரிகள் கேட்டுக் கொள்வார்கள். நேர்காணலுக்கு முன் ஒரு சட்டப் பிரதிநிதியை நீங்கள் சந்திப்பது மிகவும் முக்கியமாகும். தேவைப்படுமானால், நேர்காணலின்போது அங்கு ஒரு மொழிப்பெயர்ப்பாளர் வேண்டுமென்று நீங்கள் கேட்கவேண்டும். உங்களுக்கு ஒரு பெண்ணோ அல்லது ஓர் ஆணோ நேர்காணல் நடத்த வேண்டுமென்று நீங்கள் விரும்பினால், அதையும் நீங்கள் கேட்டுக் கொள்ளலாம்.

நீங்கள் ஏன் யூகேவிற்கு வந்துள்ளீர்கள் மற்றம் நீங்கள் ஏன் உங்கள் தாய் நாட்டிற்கு திரும்ப முடியாது என்பதை விளக்க உங்களுக்கு கிடைத்துள்ள மிக முக்கியமான வாய்ப்பு இந்த நேர்காணலாகும். இதில், உங்கள் அடைக்கல விண்ணப்பம் குறித்த அதிகபட்ச விவரங்களை அவருக்கு நீங்கள் அளிக்க வேண்டும். மருத்துவ ஆவணங்கள், உங்கள் நாட்டில் நடைபெற்ற நிகழ்வுகள் தொடர்பான செய்தித்தாள் அறிக்கைகள் போன்ற கூடுதல் சான்றுகள் அனைத்தையும் நீங்கள் அளிக்க வேண்டும். நீங்கள் தருகின்ற விவரங்கள் மற்றும் சான்றுகள் உங்களுக்கு எதிரானவையாக அல்லாமல், உங்கள் கோரிக்கைக்கு வலு வேர்ப்பவையாக இருக்கவேண்டும் ன்பது மிகவும் முக்கியமாகும். இங்கு யூகேயிலோ அல்லது வேறு எங்காவதோ உள்ள குடும்பத்தைப் பற்றிய விவரங்களையும் நீங்கள் சேர்க்க வேண்டும், ஏனென்றால் இது அவர்களோ அல்லது நீங்களோ அளிக்கும் எதிர்கால விண்ணப்பங்களை பாதிக்கலாம்.

உங்கள் சட்டப் பிரதிநிதி உங்கள் அடைக்கல நேர்காணலில் பங்கேற்பதற்கு சாத்தியமில்லை (சட்ட ஆலோசனை குறித்த கூடுதல் விவரங்களுக்கு, பக்கம் 5ஐ பார்க்கவும்). உங்கள் நேர்காணலின் போது சட்ட பிரதிநிதி யாரும் இல்லாவிட்டால், அதனை ஒலிநாடாவில் பதிவு செய்யும்படி நீங்கள் அதிகாரிகளை கேட்டுக் கொள்ளலாம். நேர்காணல் நடைபெறுவதற்கு 24 மணி நேரத்திற்கு முன்னதாக அதிகாரிகளுக்கு தெரிவிக்க வேண்டும். நேர்காணலுக்குப்பின் நீங்கள் பொருந்தும் விரங்களை எதையேனும் விட்டுவிட்டதாகக் கருதினால், இயன்றவரை விரைவாக அது குறித்து உங்கள் சட்டப் பிரதிநிதிக்கு நீங்கள் தெரிவிக்க வேண்டும். கூடுதல் விவரங்கள் அல்லது சான்றுகளை சமர்ப்பிப்பதற்கு, உங்கள் அடைக்கல நேர்காணல் முடிந்த நாளில் இருந்து 5 வேலை நாட்கள் அவகாசம் மட்டுமே உங்கள் சட்டப் பிரதிநிதிக்கு உள்ளது.

### காவலில் வைக்கப்படுதல் மற்றும் ஆஜராதல்

அடைக்கல விண்ணப்பத்தின் எந்த ஒரு நிலையிலும், சில அடைக்கலம் நாடுவோரை காவலில் வைக்கும் அதிகாரம் UKBA -விற்கு உண்டு. ஆனால் உங்களை காவலில் வைக்கப்படவேண்டிய அவசியத்தை அவர்கள் சுட்டிக்காட்ட வேண்டும். அவர்களது அடைக்கல விண்ணப்பத்தின் மீது விரைவாக முடிவெடுக்கலாம் என்று எண்ணும்போது அல்லது அவர்கள் தங்களுடன் தொடர்பு

கொள்ள மாட்டார்கள் என்று நினைக்கும்போது, அதிகாரிகள் அந்நபர்களை அவ்வப்போது காவலில் வைப்பதுண்டு. உங்களை காவலில் வைக்க அதிகாரிகள் முடிவு செய்தால், உங்களை அவர்கள் ஏன் காவலில் வைக்கிறார்கள் என்பதை எழுத்து மூலமாக அவர்கள் உங்களுக்கு தெரிவிக்க வேண்டும். இந்த முடிவை நீங்கள் எதிர்க்க இயலலாம். உங்களை விடுவிப்பதற்கான பேச்சுவார்த்தைக்கு முயற்சி செய்யும் பொருட்டு நீங்கள் சட்ட ஆலோசனை பெற வேண்டும். குடிவரவு காவலில் உள்ளோர்க்கு ஜாமீன் (Bail for Immigration Detainees – BID) என்று அழைக்கப்படும் ஓர் அமைப்பு அல்லது காவலில் இருக்கும் நபர்களைக் காண வரும் வருகையாளர்கள் குழுக்கள், உங்கள் விடுதலை குறித்து நீங்கள் பேச்சுவார்த்தை நடத்துவதற்கான விவரங்களை உங்களுக்கு அளிக்கக்கூடும். தயவுசெய்து BID'ன் பின்வரும் வலைத்தளத்தைப் பார்க்கவும்: http://www.biduk.org அல்லது 020 7247 3590 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளவும்.

காவலில் வைக்கப்படாத பெரும்பாலான அடைக்கலம் நாடுவோர், ஆஜர் மையங்களில் வழக்கமான முறையில் ஆஜராக வேண்டுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆஜராவதற்காக நீங்கள் மூன்று மைல்களுக்கும் கூடுதலாக பயணம் மேற்கொள்ள வேண்டுமென்றால், உங்கள் பயணச் செலவிற்கான உதவி பெறும் பொருட்டு நீங்கள் விண்ணப்பிக்கலாம்.

## முடிவுக்காக நான் காத்திருக்கும்போது என்ன நடக்கும்?

UKBA உங்களை பங்கேற்கும்படி கூறும் அனைத்து நேர்காணல்களிலும் நீங்கள் பங்கேற்க வேண்டும். அவர்கள் உங்களுக்கு அளிக்கும் எந்த படிவங்களையும் குறிப்பிட்ட கால வரம்பிற்குள் நீங்கள் பூர்த்தி செய்து திரும்ப அளிக்க வேண்டும். இதை நீங்கள் செய்யத் தவறினால், தங்கள் தேவைகளுக்கேற்ப நீங்கள் நடந்து கொள்ளவில்லை என்ற காரணத்திற்காக UKBA உங்கள் அடைக்கல விண்ணப்பத்தை நிராகரிக்கக்கூடும். இச்சமயத்தில் உங்கள் முகவரியில் மாற்றங்கள் இருந்தால், அதைப்பற்றி நீங்கள் UKBA யிடம் தெரிவிக்க வேண்டியது மிகவும் முக்கியமாகும். அதை நீங்களே செய்யலாம் அல்லது உங்கள் சார்பாக உங்கள் சட்டப் பிரதிநிதியைச் செய்யும்படி கேட்டுக் கொள்ளலாம்.

### எனது விண்ணப்பம் மறுக்கப்பட்டால் என்ன நடக்கும்?

சில விண்ணப்பங்கள் பின்னாலில் மேல்முறையீட்டில் வெற்றி பெற்றாலும், பெரும்பாலான அடைக்கல விண்ணப்பங்கள் மறுப்படுகின்றன. சில அடைக்கலம் நாடுவோர் யூகேயைவிட்டு வெளியேறிய பின்னரே மேல்முறையீடு செய்ய முடியுமென்றாலும், உங்கள் அடைக்கல விண்ணபத்தை UKBA நிராகரித்தால், இந்த நிராகரிப்புக்கு எதிராக உங்களால் மேல்முறையீடு செய்யமுடியும். நீங்கள் தங்கியிருப்பதற்கு அனுமதிக்க வேண்டுமென்பதற்கு வேறு காரணங்கள் இருக்குமானால், உதாரணமாக, யூகேயைவிட்டு உங்களை வெளியேறச் செய்வது உங்கள் மனித உரிமைகளை மீறுவதாக இருக்குமானால், உங்கள் மேல்முறையீட்டில் அவை குறிப்பிடப்பட வேண்டும். நீங்கள் கட்டாயமாக ஒரு குறிப்பிட்ட கால வரம்பிற்குள் மேல்முறையீடு செய்ய வேண்டுமென்பதால், அதைச் செய்ய உங்களுக்கு உதவும் பொருட்டு, உங்கள் சட்டப் பிரதிநிதியை நீங்கள் உடனடியாகத் தொடர்பு கொள்வது மிகவும் முக்கியமாகும்.உங்கள் மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டால், UKBA நீங்கள் நாட்டைவிட்டு வெளியேற வேண்டும் என்று எதிர்பார்க்கும். நீங்கள் தானாக வெளியேறாவிட்டால், உங்களை கட்டாயமாக வெளியேற்றுவதற்கு அதிகாரிகள் முயற்சிக்கக் கூடும்.

### மேலும் கூடுதலாக சமர்ப்பித்தல்

உங்கள் மேல்முறையீடு மறுக்கப்பட்டால், மற்றும் உங்களுக்கு மேற்கொண்டு மேல்முறையீடு செய்யும் உரிமைகள் இல்லாவிட்டால், நீங்கள் யூகேவில் தொடர்ந்து தங்கியிருப்பதற்கு ஏன் அனுமதிக்கப்பட வேண்டும் என்பதற்கான புதிய அல்லது கூடுதல் காரணங்களை அளிக்க நீங்கள் முடிவு செய்யலாம். இது 'மேலும் கூடுதலாக சமர்ப்பித்தல்' என்றழைக்கப்படுகிறது. இது குறித்து நீங்கள் சட்ட ஆலோசனை பெறுவது முக்கியமாகும். கூடுதல் சமர்ப்பித்தல்களை வழக்கமாக நேரில் தான் மேற்கொள்ள முடியும்.

**நீங்கள் அடைக்கலத்திற்கு முதன்முதலாக 5, மார்ச் 2007க்கு முன் விண்ணப்பித்திருந்தால்**, மற்றும்,உங்கள் விண்ணப்பம் ஆய்வு செய்யப்பட்டு முழுமையாக முடிக்கப்படாவிட்டால், நீங்கள் உங்கள் கூடுதல் சமர்ப்பித்தல்களை நியமனம் மூலமாக மற்றும் லிவர்பூல் கூடுதல் சமர்ப்பித்தல் மையத்தில் (Liverpool Further Submissions Unit – FSU) நேரடியாக ஆஜராகி செய்யலாம். 0151 213 2411 என்ற எண்ணில் அழைப்பதன் மூலம், நீங்கள் ஒரு சந்திப்பிற்கு ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும். நீங்கள் முன்னேற்பாடின்றி FSU –க்கு வந்தால், நீங்கள் திருப்பி அனுப்பப்படுவீர்கள். உங்களுக்கு ஒரு மொழிபெயர்ப்பாளர் தேவைப்பட்டால், சந்திப்பிற்கு ஏற்பாடு செய்யும்போதே அதனை நீங்கள் குறிப்பிட வேண்டும்.

**நீங்கள் அடைக்கலத்திற்கு 5 மார்ச் 2007 அன்று அல்லது அதற்குப்பின் விண்ணப்பித்திருந்தால்,** உங்கள் மண்டலத்தில் ஒரு வழக்கமான அறிவிப்புமையம் நிகழ்ச்சியின்போது கூடுதல் சமர்ப்பித்தல்களை நீங்கள் அளிக்க வேண்டும்.

விதிவிலக்கான விதிமுறைகளைப் பூர்த்தி செய்யும் சில அடைக்கலம் நாடுவோரால் நேரடியாக வருவதற்கு பதிலாக கூடுதல் சமர்ப்பித்தல்களை அஞ்சல் மூலம் அனுப்ப முடியும். நீங்கள் இந்த வகைப்பாட்டில் வருகிறீர்கள் என்பதை அறிந்து கொள்வதற்கு உங்களுக்கு அருகாமையில் உள்ள ஓர் உள்ளூர் முகமையைத் தொடர்பு கொள்ளவும்.

## அடைக்கல நடைமுறை

இந்த வரைபடம், ஒரு அடைக்கலத்திற்கான விண்ணப்பம் செல்லக்கூடிய பொதுவான பாதையை குறிக்கிறது. உங்கடையது வித்தியாசமானதாக இருக்கலாம் - உங்கள் விஷயம் பற்றிய கூடுதல் விவரத்திற்கு தயவுசெய்து ஓர் ஆலோசனை பணியாளர் அல்லது ஒரு சட்டப் பிரதிநிதியைக் கேட்கவும்.




### சட்ட ஆலோசனை

ஒரு சட்டப் பிரதிநிதியிடமிருந்து நீங்கள் சட்ட ஆலோசனை பெறலாம். சட்டப் பிரதிநிதிகள் தங்களை நகரசட்ட அலுவலர், வழக்கறிஞர் அல்லது சட்ட ஆலோசகர்கள் என்று அழைத்துக் கொள்ளக்கூடும். உங்களிடம் போதிய அளவு பணமில்லாவிட்டால், நீங்கள் சட்ட ஆலோசனைக்கு கட்டணம் எதுவும் செலுத்தத் தேவையில்லை. உங்கள் சட்ட ஆலோசகர்கள் தங்கள் கட்டணம் மற்றும் செலவுகளுக்கான தொகையை அரசை செலுத்தும்படி கேட்கலாம். இதற்கு சட்ட உதவி (Legal aid) என்று பெயர். உங்களுக்கு தேவைப்படுமானால் சட்ட பிரதிநிதிகள் ஒரு மொழிப்பெயர்ப்பாளருக்கு ஏற்பாடு செய்யவேண்டும்.

உங்கள் அடைக்கல விண்ணப்பம் மறுக்கப்பட்டு, நீங்கள் மேல்முறையீடு செய்ய விரும்புகிறீர்கள்,ஆனால் சட்ட உதவி மீது சார்ந்திருக்கும் போது மேல்முறையீட்டில் நீங்கள் வெற்றி பெறுவதற்கான நியாயமான வாய்ப்பு இல்லையென்று ஒரு சட்டப் பிரதிநிதி கருதுவாரானால், அவர் உங்கள் வழக்கை எடுத்துக் கொள்வதற்கு மறுப்பு தெரிவிக்கலாம்.இது நடைபெற்று, உங்கள் பக்கம் வலுவானதாக இருப்பதாக நீங்கள் கருதினால், சட்ட சேவைகள் ஆணையத்திற்கு (Legal Services Commission) மேல்முறையீடு செய்வதன் மூலம், உங்கள் சட்டப் பிரதிநிதியின் முடிவுக்கு நீங்கள் சவால் விடுக்கலாம். உங்கள் சட்டப் பிரதிநிதி உங்களுக்கு மேல் முறையீட்டிற்கான படிவத்தை அளித்து, அதனை எவ்விதம் சமர்ப்பிக்க வேண்டுமென்ற விவரத்தையும் அளிக்க வேண்டும். நீங்கள் ஸ்காட்லாந்தில் இருந்தால், அங்கு பல்வேறு விதமான சட்ட ஏற்பாடுகள் உள்ளன. ஸ்காட்லாந்து அகதிக் குழுவால் (Scottish Refugee Council) உங்களுக்கு ஆலோசனை வழங்கமுடியும்.

யூகேயின் சில பகுதிகளில், அடைக்கலப் பணிகளை மேற்கொள்ளும் சட்டப் பிரதிநிதிகள் குறைந்த எண்ணிக்கையிலேயே இருப்பார்கள். வேறொரு பகுதியைச் சேர்ந்த ஒரு சட்டப் பிரதிநிதியை காண்பதற்கு நீங்கள் பயணம் மேற்கொள்ள வேண்டும் என்பதையே இது குறிக்கிறது. நீங்கள் அடைக்கல உதவியைப் பெறுபவராக இருந்து, உங்கள் பகுதியில் சட்டப் பிரதிநிதி யாரும் இல்லாவிட்டால், நீங்கள் அவரைக் காண்பதற்காக மேற்கொள்ளும் பயணங்களுக்கான போக்குவரத்து செலவுகளை உங்கள் சட்டப் பிரதிநிதி ஏற்கக்கூடும்.

முதன்முதலில் அடைக்கலத்திற்கு விண்ணப்பித்ததற்குப்பின் நீங்கள வேறொரு பகுதிக்கு மாறிச் சென்றிருந்தால், சந்திப்பு ஏற்பாடுகளுக்காக பயணம் செய்வது சிரமத்தை ஏற்படுத்தக்கூடுமாதலால், அப்பகுதியிலேயே உள்ள ஒரு சட்டப் பிரதிநிதியைக் கண்டறிய நீங்கள் விரும்பக்கூடும்.

நீங்கள் தரம் வாய்ந்த சட்ட ஆலோசனையைப் பெறுவது மிகவும் முக்கியமாகும். உங்கள் சட்டப் பிரதிநிதி, குடிவரவு சட்டத்தின் சட்ட சேவைகள் ஆணையத்துடன் (LSC) ஒப்பந்தம் வைத்துள்ள ஒரு நிறுவனத்தைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும் அல்லது குடிவரவு சேவைகள் ஆணையர் அலுவலகத்தில் (Office of the Immigration Services Commissioner - OISC) பதிவு செய்யப்பட்ட ஓர் ஆலோசகர் இருக்க வேண்டும்.

இந்த அமைப்புகள் பின்வரும் சின்னங்களில் ஒன்றை அல்லது இரண்டையுமே காட்சிப்படுத்தியிருக்க வேண்டும்:

அடைக்கலச் சட்டம் குறித்த ஆலோசனையை வழங்கக்கூடிய அங்கீகரிக்கப்பட்டுள்ள நிறுவனங்களின் பட்டியலை OISC-யை தொடர்பு கொண்டு நீங்கள் பெறலாம். தொலைபேசி: 0845 000 0046 http://www.oisc.gov.uk என்ற வலைத்தளத்தை அணுகவும்.

**இங்கிலாந்து மற்றும் வேல்ஸில் சட்ட ஆலோசனை**
சமூக சட்ட ஆலோசனை (Community Legal Advice) இங்கிலாந்து மற்றும் வேல்ஸில்உள்ள சட்டப் பிரதிநிதிகளின் பட்டியல் ஒன்றை வெளியிடுகிறது, தொலைபேசி: 0845 345 4345 அல்லது http://www.communtylegaladvice.org.uk என்ற வலைத்தளத்திற்கு விஜயம் செய்யவும்.

**ஸ்காட்லாந்தில் சட்ட ஆலோசனை**
ஸ்காட்லாந்து சட்டச் சங்கம் (Law Society of Scotland) ஸ்காட்லாந்திலுள்ள சட்டப் பிரதிநிதிகளின் பட்டியல் ஒன்றை வெளியிடுகிறது.
தொலைபேசி: 0131 226 7411 அல்லது http://lawscot.org.uk என்ற வலைத்தளத்தை அணுகவும்.

**வட அயர்லாந்தில் சட்ட ஆலோசனை**
வட அயர்லாந்து சட்ட சேவைகள் ஆணையம் (Northern Ireland Legal Services Commission) அயர்லாந்திலுள்ள சட்டப் பிரதிநிதிகளின் பட்டியல் ஒன்றை வெளியிடுகிறது. http://www.nilsc.org.uk என்ற வலைத்தளத்தை அணுகவும்.

## ஒரு சட்டப் பிரதிநிதியைப் பெறுவதற்கான பிற வழிகள்

**அடைக்கல உதவி (Asylum Aid) – http://www.asylummaid.org.uk**
ஆலோசனைக்கான எண்: 020 7354 9264 செவ்வாய்: பிற்பகல் 1 மணி – 4 மணி, வியாழன்: காலை 10 மணி – மதியம் 12.30 மணி வரை

**குடிவரவு சட்டப் பணியாளர் சங்கம் (Immigration Law Practitioners Association)**– http://www.ilpa.org.uk

**சட்ட மையங்களின் கூட்டமைப்பு (Law Centres Federation) – http://www.lawcentres.org.uk**

## உங்கள் சட்டப் பிரதிநிதியிடம் உங்களுக்கு திருப்தி இல்லையா?
உங்கள் சட்டப் பிரதிநிதியிடம் உங்களுக்கு திருப்தியில்லை மற்றும் அவரது சேவை மோசமாக இருப்பதாக நீங்கள் கருதினால், குடிவரவு சேவைகள் ஆணையர் அலுவலகத்திற்கு நீங்கள் ஒரு புகார் மனுவை அளிக்கலாம். 0845 000 0046 என்ற தொலைபேசி எண்ணில் அழைக்கவும் அல்லது அவர்களது www.oisc.giv.uk என்ற வலைத்தளத்தை அணுகவும்.

***இச்சிற்றேட்டில் கொடுக்கப்பட்டுள்ள விவரங்கள் வழிகாட்டுதலுக்கு மட்டுமேயின்றி, சட்டத்தின் முழுமையான விளக்கமல்ல. விரிவான ஆலோசனைக்கு தயவுசெய்து சட்ட ஆலோசனையைப் பெறவும்.***

Asylum Support Partnership consists of:

North of England Refugee Service, charity number: 1091200 www.refugee.org.uk
Refugee Action, charity number: 283660 www.refugee-action.org.uk
Refugee Council, charity number: 1014576 www.refugeecouncil.org.uk
Scottish Refugee Council, charity number: SC008639 www.scottishrefugeecouncil.org.uk
Welsh Refugee Council, charity number: 1102449 www.welshrefugeecouncil.org